தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 7-3-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த உளுந்து மற்றும் பாசிப்பயிரை உடனே விற்கவும்

உலகளவில் பயறு வகைகள் 107 நாடுகளில் பயிரிடப்படுகிறது, 73 மில்லியன் எக்டர் பரப்பபளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டு, 66 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தயா, சீனா, பிரேசில், ஆஸ்திரேலியா, கனடா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகள் பயிறு உற்பத்தயில் முன்னிலை வகிக்கின்றன. உலகளவில் இந்தியா பயறுவகைகளில் மிகப்பெரிய உற்பத்தியாளர்களாவும், நுகர்வோர் மற்றும் இறக்குமதியாளராகவும் உள்ளது. இந்திய வேளாண் அமைச்சகத்தின் நான்காம் முன்கணக்கீட்டின்படி, இந்தியாவின் மொத்த பயறு வகை உற்பத்தி 2013-14ல் 19.78 மில்லியன் டன்களாக உள்ளது. 2014-15ல் இது 19.50 மில்லியன் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2013-14ல் மொத்த இந்திய பயறு வகை உற்பத்தியில் உளுந்து 7.85 சதவீதமும் மற்றும் பாசிப்பயறு 7.76 சதவீதமும் பங்கினை கொண்டுள்ளன.

இந்திய அரசின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்குனரகத்தின் சமீபத்திய ஆய்வு அறிக்கையின்படி, 2014-15ல் இந்தியாவின் பயறு வகை நுகர்வு தேவையானது 22 மில்லியன் டன்கள் ஆகும். ஆனால், தற்போது இந்தியாவின் மொத்த பயறு வகை உற்பத்தி 19.50 மில்லியன் டன்களே உள்ள நிலையில் மீதி உள்ள சுமார் 2.50 மில்லியன் டன்கள் பயறு வகை தேவையை இறக்குமதி மூலமே சரிசெய்யப்படுகிறது. கனடா, ஆஸ்திரேலியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளிலிருந்து, இந்தியா 60 சதவீதத்திற்கும் அதிகமாக பயறு வகைகளை இறக்குமதி செய்கின்றது.

தமிழ்நாட்டில் உளுந்து மற்றும் பாசிப்பயிற்றின் உற்பத்தி 0.89 இலட்சம் டன்கள் மற்றும் 0.34 இலட்சம் டன்கள் ஆகும். கடலூர் (24%), நாகப்பட்டினம் (12%), விழுப்புரம் (11%),

தஞ்சாவூர் (10%) மற்றும் திருவாரூர் (8%) ஆகிய மாவட்டங்கள் உளுந்து சாகுபடியிலும் முறையே, நாகப்பட்டினம் (17%), திருவாரூர் (16%), திருவள்ளூர் (15%), தூத்துக்குடி (14%) மற்றும் சேலம் (11%) ஆகிய மாவட்டங்கள் பாசிப்பயறு சாகுபடியிலும் முன்னிலை வகிக்கின்றன. விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தற்போது உளுந்தின் சராசரி விலை கிலோவிற்கு ரூபாய் 54 மற்றும் பாசிப்பயிறின் சராசரி விலை கிலோவிற்கு ரூபாய் 64 ஆகவும் உள்ளன. தற்போது குறிப்பாக, நெல்லுக்கு பிந்தைய சாகுபடியான உளுந்தும், பாசிப்பயிறும் அறுவடை சமயத்தில் உள்ளன. எனவே, விவசாயிகள் விளைவித்த உளுந்து மற்றும் பாசிப்பயரை இருப்பு வைக்கலாமா அல்லது விற்கலாமா என்று தெரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர்.

இதன்பொருட்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் உள்ள வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின், பின்புல அலுவலகம் கடந்த 10 வருடங்களாக விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய உளுந்து மற்றும் பாசிப்பயிறின் விலையை ஆராய்ந்தது. ஆய்வு முடிவுகளின்படி, வருகின்ற மார்ச் -மே 2015ல் உளுந்தின் விலை கிலோவிற்கு ரூபாய் 57 – 59ம், பாசிப்பயிறின் விலை கிலோவிற்கு ரூபாய் 64 – 65 வரையிருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உளுந்து பயறுக்கு வருகின்ற ஜுன் - ஜுலை மாதங்களில், கிலோவிற்கு ரூபாய் 3 வரை விலை உயர வாய்ப்புள்ளது. ஆனால், பாசிப்பயறுக்கு இவ்வாறு விலை ஏற வாய்ப்புகள் காணப்படவில்லை. எனவே, விவசாயிகள் மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில் அறுவடை செய்த உளுந்தையும், பாசிப்பயறையும் விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405.

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயறுவகைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2450498

மக்கள் தொடர்பு அலுவலர்